**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.140/2025**

**Deposition of Witness for Prosecution PW 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பிரகாஷ் | Father's Name | : | பாஸ்கர் |
| Village | : | காட்டூர் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 27 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 03rd day of February 2026.**

**(A1 to A3 are present. A4 died).**

**முதல் விசாரணை**

நான் தற்போது காட்டூரில் வசித்து வருகிறேன். நான் திருவாரூர் தாலுகா காவல் நிலையத்தில் FOP பிரிவில் பணியாற்றி வருகிறேன். கடந்த 17.05.2017 ம் தேதி இரவு காவலர்கள் கவியழகன், வீரசேகரன் ஆகியோருடன் திருவாரூர் விளமல் அருகில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது இன்டிகா கார் ஒன்று நிற்காமல் எங்கள் மீது உரசுவதுபோல் வந்து கொண்டிருந்தது. நாங்கள் அந்த காரை பின்தொடர்ந்து சென்றபோது அந்த கார் திருவாரூரிலிருந்து மயிலாடுதுறை சாலையில் சென்று கொண்டிருந்தது. இந்த தகவலை வாக்கி டாக்கி மூலம் கண்ட்ரோல் ரூமிற்கு தகவல்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.03 16:05:28 +0530

சொல்லிவிட்டு அந்த காரை பின்தொடர்ந்து சென்றோம். சன்னாநல்லூர் அருகில் நன்னிலம் காவல் நிலைய காவலர் சீனிவாசன் மேற்படி காரை மறைத்தபோது அந்த கார் திரும்பவும் எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தது. சன்னாநல்லூர் பாலம் அருகில் நாங்கள் எங்கள் வாகனத்தை நிறுத்திவிட்டு நின்று கொண்டிருந்தோம். அந்த காரை மறைக்க முற்பட்டபோது அந்த கார் எங்களை மோதுவதுபோல் வந்து நாங்கள் வந்த யமஹா க்ளாரியேட்டர் இருசக்கர வாகனத்தின் மீது மோதி அருகிலிருந்த மரத்தின் மீது மோதி அந்த கார் நின்று விட்டது. அந்த காரில் இருந்த நபர்களில் 3 நபர்களுக்கு அடிபட்டு விட்டது. நாங்கள் 108 ஆம்புலன்சிற்கு தகவல் கொடுத்து 108 ஆம்புலன்ஸ் மூலம் காயம்பட்ட நபர்களை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம். தலைமை காவலர் வீரசேகரன் திருவாரூர் தாலுகா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

கார் மரத்தில் மோதி நிற்கும்போது இரவு 11.00 மணியிருக்கும். ஆய்வாளர் என்னை விசாரித்தபோது எந்த தேதியில், எத்தனை மணிக்கு சம்பவம் நடந்தது என்ற கேள்விகளை முன்வைத்து என்னை விசாரிக்கவில்லை என்றால் சரி. சம்பவ இடத்தில் 3

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.03 16:05:33 +0530

காரில் வந்த 3 நபர்கள் அடிபட்டு கிடந்தார்கள், அவர்களை காரிலிருந்து நானும் காவலர்களும் 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை விசாரித்தபோது சன்னாநல்லூர் அருகில் நன்னிலம் காவல் நிலைய காவலர் சீனிவாசன் மேற்படி காரை மறைத்தார் என்ற விபரத்தை சொல்லியுள்ளேன் என்றால் சரி. நான் முதல் விசாரணையில் சொன்ன கார் எங்களை உரசுவதுபோல் சென்றது எனவும் மயிலாடுதுறை சாலையில் கார் எங்களை நோக்கி வந்தது எனவும் போலீசார் விசாரணையில் சொன்ன விபரம் போலீசார் சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. நான் 2 ஆண்டு காலமாக FOP ஆக இருக்கிறேன். அதற்கான ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லை. நான் Diploma படித்துள்ளேன். என்னுடைய சொந்த ஊர் காட்டூராகும். சம்பவத்தை கேள்விபட்டு இரவு 11.30 மணியளவில் திருவாரூர் காவல் துணை கண்காணிப்பாளர் ஜீப்பில் வந்து விட்டார். சம்பவ இடத்திலேயே தலைமை காவலர் வீரசேகரை DSP யும் ஆய்வாளரும் விசாரித்தபோது நடந்த விபரங்களை சொன்னார், ஆய்வாளர் எழுதிக் கொண்டார். தலைமை காவலர் வீரசேகரன் மற்றும் நானும் மறுநாள் விடியற்காலை 5.30 மணியளவில்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.03 16:05:39 +0530

திருவாரூர் தாலுகா காவல் நிலையம் வந்து விட்டோம். அப்போது தாலுகா காவல் நிலையத்தில் ஆய்வாளர் இருந்தார். காவல் நிலையத்தில் விடியற்காலை 5.30 மணிக்கு ஆய்வாளர் என்னையும் தலைமை காவலர் வீரசேகரனையும் விசாரித்தபோது நடந்த விபரங்களை ஆய்வாளரிடம் சொன்னோம். யமஹா வண்டியில் எதிரிகளின் வாகனம் மோதியதில் முன்வீல், பெட்ரோல் டாங்க், ஹேண்ட் பார் ஆகியன சேதமடைந்து விட்டது. இந்த வாகனத்தை எங்களால் எடுக்க முடியவில்லை சம்பவ இடத்திலேயே நின்றது. திருவாரூர்-மயிலாடுதுறை சாலை வடக்கு-தெற்காக செல்ல கூடிய சாலை என்றால் சரி. மயிலாடுதுறையிலிருந்து திருவாரூர் நோக்கி வரும்போது இடதுபக்கம் என்பது கிழக்கு பக்கம் என்றால் சரி. ரோட்டை ஒட்டி இருந்த மரத்தில்தான் கார் மோதியது, நாங்கள் போய் பார்க்கும்போது காரில் இருந்தவர்கள் மயக்க நிலையில் இருந்தார்கள், யாரும் பேசும் நிலையில் இல்லை. நான் காவல் துறை குழுவில் நண்பராக இருப்பதே பொய் என்றால் தவறு. FOP பிரிவில் இருப்பவர்களுக்கு அந்தந்த தாலுகா DSP சான்று வழங்குவார் எனவும் என்னிடம் சான்று எதுவுமில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. எதிரிகள் வந்த வாகனம் மயிலாடுதுறை சாலையில் எதிர்பாராத விதமாக விபத்துக்குள்ளானது என்றும் இந்த விபத்தை போலீசார் பொய்யாக தங்கள் மீது மோத

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.03 16:05:46 +0530

வந்ததாக பொய் வழக்கை ஜோடித்து என்னை ஒரு சாட்சியாக சேர்த்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.03 16:05:52 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.140/2025**

**Deposition of Witness for Prosecution PW 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சீனிவாசன் | Father's Name | : | கலியபெருமாள் |
| Village | : | எரவாஞ்சேரி | Taluk | : | குடவாசல் |
| Calling | : | | Age | : | 44 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 03rd day of February 2026.**

**(A1 to A3 are present. A4 died).**

**முதல் விசாரணை**

நான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் அயல் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.05.2017 அன்று நானும் FOP வீனசும் ரோந்து பணியிலிருந்தபோது எனக்கு வான் செய்தி மூலம் திருவாரூர் கண்ட்ரோல் ரூமிலிருந்து திருவாரூரிலிருந்து ஒரு கார் இரவு ரோந்து பணியிலிருந்த காவலர்கள் மீது மோதுவதுபோல் நிற்காமல் மயிலாடுதுறை நோக்கி வந்து கொண்டிருப்பதாக செய்தி வந்தது. சன்னாநல்லூர் பாலம் அருகே ரோட்டின் நடுவே ஒரு டேங்கர் லாரியை நிறுத்தி அந்த காரை பிடிக்கலாம் என நானும் FOP வீனசும் நின்று கொண்டிருந்தோம். எங்கள் அருகே வந்த அந்த கார்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.03 16:05:57 +0530

நிற்காமல் மீண்டும் திருவாரூரை நோக்கி திரும்ப சென்றது. நாங்கள் இந்த செய்தியை வான் செய்தி மூலம் கண்ட்ரோல் ரூமிற்கு தெரிவித்துவிட்டு அந்த காரின் பின்னால் வந்தோம். அந்த கார் சன்னாநல்லூர் பாலத்திற்கு முன்னாள் திருவாரூர் சாலையில் ஒரு வயலில் உள்ள மரத்தில் மோதி நின்றது. திருவாரூர் காவல் துறையினர் காரில் வந்த நபர்களை சென்று பார்த்தபோது அவர்களுக்கு காயம் பட்டிருந்தது அதை நானும் சென்று பார்த்தேன். 108 ஆம்புலன்ஸ் மூலம் காயம்பட்டவர்களை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு திருவாரூர் தாலுகா காவல் துறையினர் அழைத்து சென்றார்கள். ஆய்வாளர் விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

நான் காரை மறைத்ததாக சொல்லப்படும் திருவாரூர்-மயிலாடுதுறை சாலையில் உள்ள சன்னாநல்லூர்-முடிகொண்டான் ஆற்று பாலம் ஆகும். எதிரிகள் விபத்துக்குள்ளான இடம் திருவாரூர்-மயிலாடுதுறை சாலையில் சன்னாநல்லூர்-முடிகொண்டான் ஆற்று பாலத்திலிருந்து சுமார் 400 மீட்டர் தெற்கே மரத்தில் மோதி வயலில் கார் இறங்கியிருந்தது. ஆய்வாளர் என்னை விசாரித்தபோது டேங்கர் லாரியை வைத்து மறைத்தேன் என சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ஆய்வாளர் என்னை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.03 16:06:03 +0530

விசாரித்தபோது எதிரிகள் வந்த வாகனம் மரத்தில் மோதி வயலில் நின்றது என சொல்லியுள்ளேனா என்றால் டூ வீலரில் மோதி மரத்தில் மோதி வயலில் நின்றதாக சொல்லியுள்ளேன். நான் பார்த்தபோது இருசக்கர வாகனம் சம்பவ இடத்திலேயே நின்றது. இருசக்கர வாகனத்தின் முன்புறம் மோதியிருந்தது. இருசக்கர வாகனத்தின் முன்பக்கம் சேதமடைந்திருந்ததா என்றால் எதிரியை சுற்றி வளைப்பதற்காக இருந்த பதட்டத்தில் சேதம் பற்றி சரியாக பார்க்கவில்லை. எதிரிகள் அவர்கள் வந்த காரில் அடிப்பட்டு காருக்குள் இருந்தார்கள். என்னை விசாரித்த காவல் ஆய்வாளர் சன்னாநல்லூர்-முடிகொண்டான் ஆற்று பாலத்திற்கும் எதிரிகள் வித்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் இடத்திற்குமிடையில் எவ்வளவு தூரம் இருக்கும் என என்னை விசாரிக்கவில்லை. விபத்து நடந்த நேரம் சுமார் 1.00 மணியிருக்கும். நான் வண்டிக்கு பின்னால் எத்தனை மீட்டர் இடைவெளியில் சென்றோம் என்றால் பதட்டத்தில் காரை பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் சென்றதால் தூரத்தை கணக்கிட்டு சொல்ல இயலாது. சன்னாநல்லூர் பாலத்திலிருந்து நான் கண்ரோல் ரூமிற்கு தகவல் சொன்ன நேரம் சுமார் 10 / 15 நொடி இருக்கும். விபத்து நடந்த இடத்திற்கு காவல் துணை கண்காணிப்பாளர், ஆய்வாளர் வந்தபோது எத்தனை மணியிருக்கும் என்றால் இரவு நேரத்தில் வந்தார்கள்,

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.03 16:06:08 +0530

எந்த நேரம் என சரியாக சொல்ல முடியாது. சம்பவம் நடைபெறவில்லை எனவும் சம்பவம் நடந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் எனவும் சொன்னால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.03 16:06:15 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.